//

DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.No.177/2022**

**prosecution witness: PW-6**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | |
| Fathers Name | : | calling | |
| Village | : | Religion | |
| Taluk | : | Age | |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜாக்குலின் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>03.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இராமநாதபுரம் மண்டபம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது மண்டபம் காவல்நிலையக் குற்ற எண்.301/20, பிரிவுகள்.304A) இதச ஆக வழக்கு பதிவு செய்து விசாரணை முடித்த சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் மேல்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.**2 ஆகும்.

2. அதன்பின்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கஜேந்திரன், சந்திரன் ஆகியோர் முனனிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ**-3 **ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**4 ஆகும்.

3. பின்பு சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் அவர்கள் பஞ்சாயத்தார் சாட்சிகள் பழனிவேல், பழனிக்குமார், முத்துமுனியாண்டி, லட்சுமி நாராயணன், சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் மதுரை கானா ஜோசப் மருத்துவமனை பிரேத வைப்பறையில் வைக்கப்பட்டிருந்த இறந்த நபரின் என்பவரின் பிரேதத்தை விசாரித்து

பிரேத விசாரணை செய்தேன். அந்த**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5** ஆகும்.

4. சார்பு ஆய்வாளர் திரு.ராமசந்திரன் பிரேதத்தை பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 6** ஆகும்.

5. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஆய்வுக்காக இராமநாதபுரம் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் அனுப்பி வைத்து அறிக்கை பெற்றுள்ளார். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7** ஆகும்.

6. இறுதியாக எனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள்.304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. வழக்கின் சாட்சிகளை யாரையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் தான் விசாரித்தார். அவர் விசாரித்ததை வைத்துதான் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துளளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவங்கள், ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு நேரடியாக செல்லவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கின் இறுதி அறிக்கையை நான் தாக்கல் செய்தது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும இல்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.03 16:54:57 +0530